தமிழ் / Tamilisch

HSK

# தாய்மொழியில் பாடவகுப்பு
**(Heimatliche Sprache und Kultur HSK)**

## பெற்றோர் - பாதுகாவலர்களுக்கான தகவல்கள்

வேற்றுமொழிகளையும் பண்பாடு - கலாச்சாரத் திறமைகளையும் ஜேர்மன் மொழியில் ஊாக்கப்படுத்துவதும் விரிவுபடுத்துவதுமே சுவிஸ் அரசபாடசாலைகளின் கொள்கை. பல வேற்றுமொழி வகுப்புக்களை சுவிஸ் அரசபாடசாலைகளில் நடாத்தி அவர்களின் பண்பாடு - கலாச்சாரங்களை வெளிப்படுத்தி ஒருங்கிணைப்பை எற்படுத்துவதற்கு அந்தந்த மானில கல்வியமைச்சுக்கள் ஊக்கமும் உதவியுமளிக்கின்றன.

## பலமொழியும் பண்பாட்டுத்திறமையும்

தமது தாய் மொழியையும் ஜேர்மன் மொழியையும் சரளமாக கற்றுள்ள இங்கு வாழும் வெளிநாட்டு இளைஞர்களினால்தான் தொழில்ரீதியாகவும் சமூகரீதியாகவும் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த முக்கிய பங்காற்ற முடியும்.

HSK வகுப்பு சுவிசில் அனைத்து மானிலங்களிலும் நடாத்தப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் சில நகரங்களில் 25 க்கும் அதிகமான மொழிகளில் பயின்று தங்கள் தாய்மொழியினையும் பண்பாட்டு கலாச்சாரத்தினையும் வெளிப்படுத்தவதற்கும் ஒருங்கிணைப்பு செய்வதங்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளன.

## HSK வகுப்புக்களின் அடிப்படை நோக்கங்கள்

எமது சிறுவர்களுக்கும் - இளைஞர்களுக்கும்

- அவர்களது தாய்மொழியில் கதைப்பதுஇ வாசிப்பதுஇ எழுதுவது மற்றும் விளங்கிக்கொள்வது போன்ற அடிப்படை திறமைகளை ஏற்படுத்தவது.
- இருமொழிகளினை அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைப்பயில்வதும் அத்துடன் மற்றவர்களின் கலாச்சாரங்களுக்கு மதிப்பளித்து விளங்கிக் கொள்வது போன்ற திறமைகளை ஏற்படுத்துவதும்.

## சமுதாய - தொழில் வாழ்க்கையில் நன்மைகள்

- யாரொருவர் தனது தாய்மொழியை சரளமாக கற்றுக்கொண்டுள்ளாரோ அவரினால் அன்னிய மொழிகளினை இலகுவாகப்பயின்று கொள்ள முடியும்.
- தாய்மொழியினை சரளமாக கற்றுக்கொண்டுள்ள பிள்ளைகளினால் தாய்நாட்டிலிருக்கும் குடும்பதாருடன்இ உறவினர்களுடன் மற்றும் தாய்நாட்டுடன் தொடர்பு கொள்ள இலகுவாகவும் உதவியாகவுமிருக்கும்.
- தாய்நாட்டுடன் தொடர்பு கொள்பவர்களுக்கு தாய்மொழியினை சரளமாக கற்றுக்கொள்ள வேண்டியது மிக அவசியம். (தொடர்படிப்புக்கள்இ தொழிற்திறன்இ மீள்குடியேற்றம் போன்றனவற்றிற்காக.)

## பிள்ளைகளின் தாய்மொழி வளர்ச்சி சரளமாவதற்கு பெற்றோர்களினாலேயே முக்கிய பங்காற்ற முடியும்.

- பிள்ளைகள் பெற்றோர்களுடன் ஜேர்மன் மொழியில் கதைத்தாலும் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் தாய்மொழியிலேயே உரையாட வேண்டும்.
- தினமும் குழந்தைகளுடன் கதைப்பதுஇ விவாதிப்பதுஇ பாடுவதுஇ கதை சொல்வது போன்றன தாய்மொமியிலேயே இருக்க வேண்டும்.
- குடும்பத்தில் தொடர்புடைய ஒவ்வொருவரும்அங்குள்ள குழந்தைகளுடன் தாய் மொழியிலேயே உரையாட வேண்டும்.
- எமது பிள்ளைகளை தாய்மொழி பேசும் பிள்ளைகளுடன் மட்டுமல்லாது டொச் மொழி மற்றும் வேற்று மொழி பேசும் பிள்ளைகளுடனும் பழக அனுமதிக்க வேண்டும்.
- பிள்கைகளிடம் பாடசாலையில் நடாத்தும் இந்த HSK பாடவகுப்புப்பற்றி ஆர்வத்துடன் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.
- தாய்மொழிப்பாடம் நடாத்தும் ஆசியர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளின் திறமைகளினை அரசபாடசாலை ஆசியருக்கு அறியத்தர வேண்டும்.

## நிர்வாகம்

இந்த HSK பாடவகுப்பானது அந்தந்த நாட்டு தூதரகங்களினால் அல்லது தனியார் அமைப்புக்களினால் ஒழுங்க செய்யப்படுகின்றது. பாலர்வகுப்பு (Kindergarten) 1ம் 2ம் வகுப்பு (Primarschule) பயிலும் மாணவர்கள் இதில் சேர்ந்து கொள்ளலாம். (பேர்ண் மானிலம் தவிர்ந்த) மற்றைய மானிலங்களில் (அநேகமாக) அரசபாடசாலைகளிலேயே இதற்காக விண்ணப்பித்துக்கெகள்ளலாம்.

இந்த HSK பாடவகுப்பானது அநேகமாக அரசபாடசாலை கட்டிடங்களிலேயே நடாத்தப்படுகின்றன. கூடுதலாக பிள்ளைகளின் வதிவிடங்களுக்கருகாமையில்.

ர்ளுமு பாடவகுப்பின் சுற்றுலாநாட்கள் சான்றிதள்கள் என்பன அரசபாடசாலை விதிமுறைகளுக்கேற்றவை யானவையாகவே இருக்கும்.

தொடர்புகளுக்கான மானில முகவரி:

**Volksschulamt des Kantons Solothurn**
Kreuzackerstrasse 1
4502 Solothurn
Telefon 032 627 29 37
vsa@dbk.so.ch
Kurse in Heimatlicher Sprache und Kultur (HSK) - Kanton Solothurn

Solothurn, 24. Januar 2011

Erarbeitet von den Erziehungsdepartementen und Bildungs-direktionen der Kantone Basel-Stadt, Basel-Landschaft, Aargau, Bern, Solothurn und Fribourg, in Zusammenarbeit mit den Träger-schaften des Unterrichts in heimatlicher Sprache und Kultur.